**கூடுதல் சார்பு நீதிமன்றம், கும்பகோணம்**

**முன்னிலை: திருமதி. S. மும்தாஜ், B.Sc.,B.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, கும்பகோணம்.**

**2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 21-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**இந்து திருமண அசல் மனு எண்.232/2021**

**CNR.No.TNTJ1A-0013682021**

*******

1. அருண்பிரசாத்

2. அபிராமி

...மனுதாரர்கள்

/ எதிர்/

இல்லை

...எதிர்மனுதாரர்

இம்மனு என் முன் 01.06.2022 ஆம் தேதி விசாரணைக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சங்கர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்களால் இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(B) -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :

மனுதாரர்கள் இருவரும் கணவன் மனைவி ஆவார்கள். மனுதாரர்கள் இருவருக்கும் பெரியோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 26.03.2018 அன்று கும்பகோணம் காஞ்சி சங்கர திருமண மஹாலில் இந்து மத சடங்கு சம்பிரதாயப்படி திருமணம் நடந்தது. மேற்படி திருமணம் கும்பகோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்டது. 1ம் மனுதாரர் B.E மற்றும் M.B.A. படித்துள்ளார். 2ம் மனுதரர் B. Tech. படித்துள்ளார்.

திருமணத்தின்போது 1ம் மனுதாரர் அபுதாபியில் வேலை செய்தார். திருமணத்திற்குப் பிறகு 2 ம் மனுதாரர் அபுதாபி சென்று நல்ல முறையில் குடும்பம் நடத்துவார் என்று 1ம் மனுதாரர் எதிர்பார்த்தார். ஆனால் திருமணத்திற்குப் பிறகு இருவரும் ஒருவருக்கொருவர் இணக்கமாக நடந்து கொள்ளவில்லை. இருவரும் 14.02.2020 அன்று இந்தியாவிற்கு திரும்பி வந்தனர். 2 ம் மனுதாரர் மார்ச் 2020 ல் தனியாகப் போய்விட்டார். அதனைத் தொடர்ந்து இருவரும் தனித்தனியாக வசித்து வந்தனர். பிறகு இருவரும் அவரவர்கள் விருப்பப்படி 26.03.2018 ல் நடந்த திருமணத்தை விவாகரத்து செய்ய முடிவு செய்தனர். 2 ம் மனுதாரர் 1 ம் மனுதாரரைப் பிரிந்து அவரது பெற்றோர்களுடன் வாழ்ந்து வருகிறார். 2 ம் மனுதாரரின் நகைகள் மற்றும் சீர்வரிசை சாமான்களை 2 ம் மனுதாரரே எடுத்துச் சென்று விட்டார். எனவே, மனுதாரர்கள் இருவரும் மன ஒற்றுமை இல்லாமல் தொடர்ந்து வாழ்க்கை நடத்த முடியாது. மனுதாரர்கள் இருவரும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதாலும், இனிமேற்கொண்டு மனுதாரர்கள் இருவரும் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என்பதாலும் இருவரும் சேர்ந்து மனமொத்து திருமண முறிவுக்காக மனு தாக்கல் செய்துள்ளனர். எனவே, இந்த மனுவை ஏற்றுக் கொண்டு மனுதாரர்கள் இருவருக்கும் இடையே கடந்த 26.03.2018 அன்று கும்பகோணம் காஞ்சி சங்கர திருமண மஹாலில் நடந்த திருமணத்தினை ரத்து செய்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை</u>:**

மனுதாரர்களுக்கு மனுவில் கோரியுள்ளபடி பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**4.** மனுதாரர்கள் தரப்பில் 1-ஆம் மனுதாரர் அருண்பிரசாத் மசா.1 ஆகவும்,

2-ஆம் மனுதாரர் அபிராமி ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>:**

மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. இவ்வழக்கு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6.** இம்மனுவானது மனுதாரர்களுக்கு 26.03.2018 அன்று கும்பகோணம் காஞ்சி சங்கர திருமண மஹாலில் நடந்த ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிடக்கோரியும், செலவுத்தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** மனுதாரர்கள் தரப்பில் 1 ஆம் மனுதாரர் அருண்பிரசாத் ம.சா.1 ஆகவும், 2-ஆம் மனுதாரர் அபிராமி ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். 1-ஆம் மனுதாரர் மூலம் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் இருவரும் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே குறிப்பிட்டு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி ம.சா.1 அருண்பிரசாத் தனது சாட்சியத்தில் தனக்கும், 2-ஆம் மனுதாரருக்கும் கடந்த 26.03.2018 அன்று கும்பகோணம் காஞ்சி சங்கர திருமண மஹாலில் திருமணம் நடைபெற்றதாக கூறியுள்ளார். மேலும் அவரின் சாட்சியத்தின் மூலம் திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், கும்பகோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் பதிவு செய்யப்பட்டதற்கான பதிவுச் சான்றிதழ் ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.2 அபிராமி அவரின் சாட்சியத்தில் ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளது போலவே திருமணம் நடந்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர்களின் சாட்சியத்தையும், ஆவணங்களையும் பரிசீலிக்கையில், மனுதாரர்கள் இருவருக்கும்ட இடையே கடந்த 26.03.2018 அன்று கும்பகோணம் காஞ்சி சங்கர திருமண மஹாலில்

திருமணம் நடந்தது என்பது மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**8**. ம.சா.1 மற்றும் ம.சா.2 ஆகியோரின் சாட்சியத்தில் இருந்து, அவர்களுக்குள் சேர்ந்து வாழ எவ்வித வாய்ப்பில்லை என்பது தெரியவருகிறது. மேலும் மனுதாரர்களுக்கிடையே திருமணத்தின்போது 2ம் மனுதாரர் வீட்டில் சீர்வரிசையாக செய்த நகைகள், சீர்சாமான்கள் ஆகியவற்றை 2ம் மனுதாரர் திரும்ப எடுத்துச் சென்றுவிட்டார் என்பதும் இனி ஒருவரிடமிருந்து மற்றவருக்கு வரவேண்டியது ஏதுமில்லை. கொடுக்க வேண்டியது ஏதுமில்லை என்றும், இருவரும் சம்மதித்து விவாகரத்து செய்து கொள்ள முடிவு செய்து இம்மனுவை சேர்ந்து தாக்கல் செய்துள்ளதும் தெரிய வருகிறது. மனுதாரர்கள் சேர்ந்து விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு கட்டாயப்படுத்தியோ, வற்புறுத்தியோ, தகாத செல்வாக்கை பயன்படுத்தியோ ஏற்பட்டதற்கான எந்த நிலையும் இங்கு காணப்படவில்லை. மேலும் 2ம் மனுதாரர் தனது சாட்சியத்தில் அவரவருக்கு சொந்தமான நகைகளையும். சீர்பொருட்களையும் அவர் திரும்ப எடுத்துச் சென்றுவிட்டதாக சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே மனுதாரர்களுக்கு அவர்கள் கேட்டுள்ளவாறு மனமொத்த சம்மதத்தின் பேரில் விவாகரத்து கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**9.** முடிவாக, மனுதாரர்களின் மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள் இருவருக்கும் இடையே கடந்த 26.03.2018 அன்று கும்பகோணம் காஞ்சி சங்கர திருமண மஹாலில் நடைபெற்ற திருமணத்தை மனமொத்த சம்மதத்தின் பேரில் ரத்து செய்து, மனுதாரர்கள் கோரியது போல இந்து திருமண சட்டம் பிரிவு 13-**B** ன் கீழ் விவாகரத்து வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம்

செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 21-ஆம் நாள் என்னால் பகரப்பட்டது,

ஒம்/எஸ். மும்தாஜ்,
கூடுதல் சார்பு நீதிபதி,
கும்பகோணம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:**

ம.சா.1 திரு அருண்பிரசாத் (1 ஆம் மனுதாரர்)

ம.சா.2 திருமதி அபிராமி (2- ஆம் மனுதாரர்)

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 26.03.2018 | திருமணப் பத்திரிக்கை |
| ம.சா.ஆ.2 | - | திருமணப் பதிவுச் சான்றிதழ் |

**எதிர்மனுதாரர்கள்** - இல்லை

ஒம்/எஸ். மும்தாஜ்,
கூடுதல் சார்பு நீதிபதி,
கும்பகோணம்.